## கூடுதல் சார்பு நீதிமன்றம், திருப்பூர்.

**OS.No. 124/2022**

திரு. சுப்பிரமணியம் (P.W. –1) **02.03.2026**

**<u>சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு 1,3,4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

சாட்சி ஆஜர். சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

1. தாவாவில் பாகப்பிரிவினை பரிகாரம் கோரியுள்ளேன் என்றால் ஆமாம். தாவா தாக்கல் செய்வதற்கு முன்பு சட்ட அறிவுப்பு எதுவும் அனுப்பவில்லை என்றால் சரி. தாவா சொத்துக்களில் எனக்கு எவ்வளவு பாத்தியம் என்ற விவரங்கள் சொல்லவில்லை என்றால் சரி. தாவா சொத்துக்கள் என்னுடைய தகப்பனார் விநாயகப்பனுக்கு பாத்தியப்பட்டது என்றால் ஆமாம். என்னுடைய தகப்பனாருக்கு எத்தனை வாரிசுகள் என்றால் நான்கு பெண்மக்கள் இரண்டு ஆண் மக்கள் அவர்கள் அனைவரையும் பாகப்பிரிவினை பரிகாரத்திற்காக தாவாவில் தரப்பினர்களாக சேர்த்து உள்ளோமா என்றால் சேர்க்கப்பட்டுள்ளது.

2. என்னுடைய இரண்டு சகோதரிகள் பெயர் என்ன என்றால் வசந்தாமணி, பத்மாவதி. அவர்கள் இருவரும் தாவாவில் தரப்பினர்களாக சேர்க்கவில்லை என்றால் சரி. அவர்கள் எனக்கு ஆவணம் எழுதிக் கொடுத்துள்ளார்கள். தாவா சொத்துக்களில் 1,3,4 பிரதிவாதிகளுக்கு 1/6 பங்கு உண்டு என்றால் ஆமாம். அவர்களுக்கு உரிய பாகத்தை ஒதுக்குவதற்கு எனக்கு ஆட்சியபனை இல்லை என்றால் சரி.

1,3,4 பிரிவாதிகள் தாக்கல் செய்த எதிர்வழக்குரைக்கு பதில் உரை தாக்கல் செய்யவில்லை என்றால் ஆமாம்.

2 ம் பிரதிவாதி தரப்பில் முறையீடு இல்லை. அழைத்து ஆஜர் இல்லை. 5 ம் பிரதிவாதி அழைத்து ஆஜர் இல்லை. 5 ம் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். 2 மற்றும் 5 ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.

சாட்சியின் கூற்று என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

K R KANNAN

Digitally signed by K R KANNAN
Date: 2026.03.02 17:31:49 +0530

கூடுதல் சார்பு நீதிபதி,
திருப்பூர்.